
**அக்டோபர் – 24**

# TNPSC துளிகள்

- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, "ஃபயர் டிரெயில் நடவடிக்கை" என்ற திட்டத்தின் கீழ், சீனாவில் தயாரிக்கப்பட்ட வெடி பொருட்கள் மற்றும் பட்டாசுகளை இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யும் கடத்தல் முயற்சியை வெற்றிகரமாக முறியடித்தது.
- தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, டேராடூனில் உத்தரகாண்ட் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த உச்சி மாநாட்டைத் தொடங்கியது.
    - இந்த நிகழ்வானது பிப்ரவரி 19 முதல் 20 ஆம் தேதி வரை புது டெல்லியில் திட்டமிடப் பட்டுள்ள 2026 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த இந்திய உச்சி மாநாட்டிற்கான முன்னோட்ட உச்சி மாநாடாகச் செயல்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பூம்புகார் கடற்கரையில் முதல் கட்ட கடலடி ஆய்வு





- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறை (TNSDA) ஆனது, பண்டைய துறைமுக நகரமான காவிரி பூம்பட்டினத்தை மையமாகக் கொண்டு பூம்புகார் கடற்கரையில் 12 நாட்கள் அளவிலான கடலடி ஆய்வினை நடத்தியது.
- இந்த ஆய்வானது திருமுல்லைவாசல் மற்றும் நெய்தவாசல் இடையேயான பகுதிகளிலும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர் S. R. ராவ் முன்னர் அடையாளம் கண்ட இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.
- சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வில் உள்ளது என்ற நிலையில் கடல் நிலைமைகள் சாதகமாக மாறும் போது இந்த ஆய்வின் இரண்டாம் கட்டமானது மேற்கொள்ளப்பட திட்டமிடப் பட்டு உள்ளது.

## தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை கணக்கின் வரவு சாராக் கடன்கள்

- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை கணக்கின் வரவு சாராக் கடன்கள் 3,919.10 கோடி ரூபாயாக இருந்தன என்று CAG

அறிக்கை தெரிவிக்கிறது.

- ❖ நிதிநிலை அறிக்கை கணக்கின் வரவு சாராக் கடன்கள் என்பது மாநிலப் பொதுத் துறை நிறுவனங்களால் எடுக்கப் பட்ட கடன்கள், ஆனால் மாநில நிதிநிலை அறிக்கை கணக்கின் மூலம் அவை திருப்பிச் செலுத்தப்படுவதால் மறைமுகமாக மாநிலக் கடன் பொறுப்புகளில் சேர்க்கப்படுகின்றன.
- ❖ 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை கணக்கின் வரவு சாராக் கடன்கள் 2,298.54 கோடி ரூபாயாக இருந்தன.
- ❖ இதில் நீர்வளங்களின் காப்பு மூலம் 1,591.53 கோடி ரூபாயும், நீர் மற்றும் சுகாதாரத் தொகுப்பு நிதி மூலம் 380.14 கோடி ரூபாயும் அடங்கும்.
- ❖ 2025-26 ஆம் ஆண்டில் 1,62,096.76 கோடி ரூபாய் கடன் வாங்கி 55,844.53 கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ இதன் விளைவாக, 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி நிலுவையில் உள்ள கடன் 9,29,959.3 கோடி ரூபாயாக இருக்கும்.





## மேட்டூர் அணையின் முழுக் கொள்ளளவு

- ❖ சேலம் மாவட்டம் மேட்டூரில் உள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கம், இந்த ஆண்டு ஏழாவது முறையாக, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் தேதியன்று அதன் முழு நீர்த்தேக்க அளவான 120 அடியை எட்டியது.
- ❖ இதன் காரணமாக, 11 டெல்டா மாவட்டங்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப் பட்டு உள்ளது.
- ❖ மேட்டூர் அணையானது 2025 ஆம் ஆண்டின் ஜூன் 12, ஜூலை 05, ஜூலை 28, ஆகஸ்ட் 19, செப்டம்பர் 15 மற்றும் அக்டோபர் 03 ஆகிய தேதிகளில் அதன் முழு கொள்ளளவை எட்டியது.
- ❖ கடைசியாக இந்த அணை ஒரு வருடத்தில் ஏழு முறை நீர்மட்டத்தை எட்டியது 1977 ஆம் ஆண்டு ஆகும்.
- ❖ 2024 ஆம் ஆண்டில், அது மூன்று முறை நீர்மட்டத்தை எட்டியது.

- இந்த அணையின் நீர்மட்டம் (முழு நீர்த்தேக்க அளவு) 120 அடி ஆகும்.
- இந்த அணையின் கொள்ளளவு 93.47 டிஎம்சி அடி ஆகும்.




## மகளிர் தொழிலாளர்களுக்கான தொழிற்சாலை விதிகள்




- தமிழ்நாடு அரசானது, 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளை திருத்த திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திருத்தமானது, முன்னர் ஆபத்தானவை என வகைப்படுத்தப்பட்ட சுமார் 20 செயல்பாடுகளில் பெண்கள் பணியாற்ற அனுமதிக்க உள்ளது.
- இரவுநேரப் பணிகளில் ஈடுபட விரும்பும் பெண் தொழிலாளர்களிடமிருந்து எழுத்துப் பூர்வ ஒப்புதல் பெறுவது இந்த திருத்தங்களில் அடங்கும்.
- கர்ப்பிணிப் பெண்கள் இந்த ஆபத்தான பணிகளில் பணிபுரிய தடை விதிக்கப்படும்.
- அனுமதிக்கப்பட்ட பணிகளில் மின்னாற்பகுப்புச் செயல்முறைகள், ஈய செயல்முறையாக்கம், கண்ணாடி உற்பத்தி மற்றும் ஈய சேர்மங்களைக் கையாளுதல் ஆகியவை அடங்கும்.

- எரிவாயு உற்பத்தி, பெட்ரோலியம் கையாளுதல், ஊது உலையிடல், தோல் பதனிடுதல், கிராஃபைட் பொடியாக்குதல், ஈய சேர்மங்களை உள்ளடக்கிய அச்சிடல் முறைகள், முந்திரிப் பருப்பு பதப்படுத்துதல், சாயமிடுதல், ஓவியம் வரைதல், இரசாயன வேலைகள், பட்டாசு உற்பத்தி மற்றும் அதிக சத்தம் அல்லது அதிர்வு சூழல்கள் ஆகியன இதில் அடங்கும்.

# தேசியச் செய்திகள்

## இராஷ்ட்ரிய போஷன் மா 2025




- 8வது இராஷ்ட்ரிய போஷன் மா (2025) நிகழ்வானது டேராடூனில் ஊட்டச்சத்து மற்றும் அதிகாரமளிப்பை மையமாகக் கொண்டு நிறைவடைந்தது.
- போஷன் மா நிகழ்வில் ஆண்களின் ஈடுபாடு, உள்ளூர் உணவுகள் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட ஆறு முக்கிய கருத்துருக்களைக் கொண்டு நிகழ்ந்தது.
- அங்கன்வாடி சேவைகள் ஆனது, இந்தியா முழுவதும் 14 லட்சம் மையங்கள் மூலம் 9 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சேவை வழங்குகின்றன.
- போஷன் டிராக்கர் செயலி ஊட்டச்சத்து சேவை வழங்கலில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தியுள்ளது.
- உள்ளூர் சிறு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை சத்தான மற்றும் பருவ நிலைக்கு ஏற்ற உணவுகளாக ஊக்குவிப்பதை உத்தரகாண்ட் அரசு வலியுறுத்தியது.
- கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து தொகுப்புகளின் இலவச விநியோகம் மற்றும் டிஜிட்டல் வழி ஆதரவு வழங்கலை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 'சுபோஷித்' (ஊட்டச்சத்து மிக்க) மற்றும் 'விக்சித் பாரத்' (வளர்ச்சியடைந்த இந்தியா) ஆகியவற்றை உருவாக்குவதே இந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

## We Rise முன்னெடுப்பு

- நிதி ஆயோக் அமைப்பின் பெண்கள் தொழில்முனைவோர் தளம் (WEP) மற்றும் DP வேர்ல்ட் ஆகியவை பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக 'We Rise'

என்ற முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளன.

- வழிகாட்டுதல் மற்றும் வர்த்தக வசதிகள் மூலம் உலகளவில் வணிகங்களை மேம்படுத்துவதில் பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்களை (MSME) இந்த முன்னெடுப்பு ஆதரிக்கிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோர் துபாயின் ஜெபல் அலி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் /வரிவிலக்கு மண்டலத்தில் உள்ள பாரத் மார்ட் நிறுவனத்தில் அதன் தயாரிப்புகளை காட்சிப்படுத்தலாம்.
- 2018 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட WEP, நிதி, சந்தை, பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் இணக்கத் தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு பொது-தனியார் கூட்டாண்மை ஆகும்.




## கபாஸ் கிராந்தி திட்டம்




- மத்திய அரசானது அதிக மகசூல் தரும், நீண்ட காலப் பருத்திச் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, 600 கோடி ரூபாய் மதிப்புள்ள கபாஸ் கிராந்தி திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

- விவசாயிகளுக்கான அறிவியல் ஆராய்ச்சி, தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மற்றும் விரிவாக்கச் சேவைகளில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.
- மகாராஷ்டிராவின் அகோலா பகுதியில் உள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரிக்க அதிக அடர்த்தியிலான தோட்டப் பயிர் (HDP) விளைச்சல் முறைகளை வெற்றிகரமாக ஏற்று பின்பற்றியுள்ளனர்.
- தெலுங்கானா விவசாயிகள் HDP நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும், அதன் ஏற்பிற்கு ஏற்ற விதைகளைப் பெறவும் மகாராஷ்டிராவிற்கு வருகை தருவர்.
- தெலுங்கானாவில் சுமார் 24 லட்சம் விவசாயிகள் பருத்தியை பயிரிடுவதுடன், அந்த மாநிலம் இந்தியாவின் முன்னணி பருத்தி உற்பத்தியாளராக மாறுகிறது.
- தீபாவளிக்குப் பிறகு நேர ஒதுக்கீட்டு முன்பதிவு மற்றும் பருத்தி விற்பனையை நெறிப்படுத்த கபாஸ் கிசான் செயலி என்ற கைபேசிச் செயலி தொடங்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## UN-GGIM-AP அமைப்பில் இந்தியாவின் தலைமைத்துவம்




- 2025-2028 ஆம் காலக் கட்டத்திற்கான ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய புவியிடத் தகவல் மேலாண்மை (UN-GGIM-AP) பிராந்தியக் குழுவின் இணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தியத் தலைமை நில அளவையாளர் ஹிதேஷ் குமார் S. மக்வானா (இந்திய ஆட்சிப் பணி அதிகாரி), இந்த மதிப்புமிக்கப் பதவியில் இந்தியாவின் பிரதிநிதியாக செயல்படுவார்.
- கொரியக் குடியரசின் கோயாங்-சியில் நடைபெற்ற UN-GGIM-AP குழுவின் 14வது முழு அளவிலான கூட்டத்தின் போது இந்தத் தேர்தல் நடைபெற்றது.
- UN-GGIM-AP ஆனது 56 நாடுகளின் தேசியப் புவியிடத் தகவல் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் புவியிட தகவல்களின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை ஊக்குவிக்கிறது.

- UN-GGIM என்பது உலகளவில் புவிசார் தகவல் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்களையும் கொள்கைகளையும் அமைக்கும் அரசுகளுக்கிடையேயான உயர் நிலை அமைப்பாகும்.

## பிரேசில்-இந்தியா உத்திசார் கூட்டாண்மை

- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை அதிகரிக்க பிரேசில் இந்தியாவுடன் ஓர் உத்திசார் கூட்டாண்மையை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்து உள்ளது.
- இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உறவுகளை வலுப்படுத்துவதே இந்த கூட்டாண்மையின் நோக்கமாகும்.
- இந்தியாவிற்கும் பிரேசிலுக்கும் இடையிலான ஒத்துழைப்பு போட்டித் தன்மையற்றது அல்ல, மாறாக அது இணை நிரப்புத் தன்மை கொண்டது.
- இந்த உத்தி சார் கூட்டுறவானது, பிரேசில் மற்றும் இந்தியப் பொருளாதாரங்களை மேம்படுத்த முயல்கிறது.




## FAO – இந்தியா கூட்டாண்மை


- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் 80ம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகிறது.
- சுதந்திரத்தின் போது உணவுப் பற்றாக்குறை உள்ள நாடாக இருந்த இந்தியா, 1.4 பில்லியன் மக்களுக்கு உணவளிக்கும் உணவு உபரி கொண்ட நாடாக மாறியுள்ளது.
- உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவு இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடையவும் நிலையான வேளாண் நடைமுறைகளை ஊக்குவிக்கவும் உதவியது.
- இந்தியா உலகின் வேளாண் நிலம் மற்றும் நன்னீர் வளங்களில் 4 சதவீதத்திற்கும் குறைவாகவே கொண்டிருந்தாலும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 800 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு உணவுப் பாதுகாப்பைப் பேணுகிறது.

- இந்திய வேளாண்மையின் முதுகெலும்பு அதன் 146 மில்லியன் சிறு மற்றும் குறு விவசாயிகள், பருவநிலைக்கு ஏற்ற நடைமுறைகள் மற்றும் பயிர் காப்பீடு போன்ற புதுமை நுட்பங்களால் ஆதரிக்கப் படுகிறது.
- அக்ரிஸ்டாக் போன்ற டிஜிட்டல் முன்னெடுப்புகள் விவசாயிகளுக்கு நிகழ்நேரத் தரவுகளுடன் அதிகாரம் அளித்து, நிலையான வேளாண்மை மற்றும் பருவநிலை ஏற்பினை மேம்படுத்துகின்றன.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரிய தாக்கத்தைக் கண்காணிக்கும் சந்திரயான்-2




- சந்திரயான்-2 கலத்தில் உள்ள கருவி, நிலவின் மீது சூரிய வெப்ப உமிழ்வின் தாக்கத்தை முதன்முதலில் நேரடியாகக் கண்காணிக்கிறது.
- சந்திர சுற்றுப்பாதையில் உள்ள சந்திரயான்-2 கலத்தின் சந்திர வளிமண்டலக் கலவை ஆய்வுக் கருவி - 2 (CHACE-2) என்ற கருவியினால் இந்தக் கண்டறிதல் மேற்கொள்ளப் பட்டது.
- சூரியனில் இருந்து தொடர்ச்சியாக வரும் சூரிய வெப்ப உமிழ்வுகள் நிலவின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தின.
- CHACE-2 பகல்நேரச் சந்திர வெளிப்புற மண்டலத்தின் மொத்த எண்ணிக்கை

அடர்த்தியில் பத்து மடங்குக்கும் அதிகமான அதிகரிப்பைக் கண்டறிந்தது.

- சூரிய துகள்கள் சந்திர மேற்பரப்பில் இருந்து அணுக்களில் மோதி, சூரிய ஒளி பெறும் சந்திர வெளிப்புற மண்டலத்தில் அழுத்தத்தை அதிகரிப்பதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சர்வதேச கடல்பசு வளங்காப்பு மையம்

- சர்வதேச கடல்பசு/டுகோங் வளங்காப்பு மையம் ஆனது தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்காவில் உள்ள சரபேந்திரராஜன்பட்டினம் கிராமத்தில் அமைக்கப் பட வனத்துறையால் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது கட்டுமானம் தடை செய்யப்பட்டுள்ள CRZ III (மேம்பாடுகள் இல்லாத மண்டலம்) உட்பட பல கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களுக்குள் (CRZ) அமைந்துள்ளது.
- முன்மொழியப்பட்ட பகுதியானது சுமார் 23,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டு உள்ளது.
- இதில் அருங்காட்சியகம், அரங்கம், சுற்றுச்சூழல் மையம் மற்றும் காட்சிப் பாதைகள் போன்ற ஆராய்ச்சி, கல்வி மற்றும் பொழுதுபோக்கு உள்கட்டமைப்பு ஆகியவை அடங்கும்.
- இந்த இடமானது சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் கொண்ட மற்றும் 2011 ஆம் ஆண்டு CRZ அறிவிப்பின் கீழ் பாதுகாக்கப் படுகின்ற கடல் புல் படுகைகள், ஒத ஆறுகள் மற்றும் சதுப்புநிலக் காடுகளுக்கு அருகில் உள்ளது.




## புல்வாய்களின் எண்ணிக்கை

- வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக 2017 ஆம் ஆண்டில் சத்தீஸ்கரில் புல்வாய்கள் உள்ளூரில் அழிந்துவிட்ட இனமாக அறிவிக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் சத்தீஸ்கர் மாநில வனவிலங்கு வாரியத்தால் ஐந்தாண்டு கால மறு அறிமுகத் திட்டம் தொடங்கப்பட்டது.
- புது டெல்லி மற்றும் பிலாஸ்பூரிலிருந்து பர்னவாபரா வனவிலங்குச் சரணாலயத்திற்கு


77 புல்வாய்கள் இடமாற்றம் செய்யப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில், சரணாலயத்தில் அவற்றின் எண்ணிக்கை 190 ஆக அதிகரித்தது, என்ற நிலையில் மேலும் அவற்றுள் 100 காட்டுக்குள் விடுவிக்கப்பட்டன என்பதோடு 90 இன்னும் காப்பகங்களில் உள்ளன.
- புல்வாய் மான்கள் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் அட்டவணை I யின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வனங்களுக்கான நிதி குறித்த அறிக்கை 2025




- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட (UNEP) அமைப்பானது வனங்களுக்கான நிதி குறித்த (SFF) அறிக்கையை வெளியிட்டது.

- 2023 ஆம் ஆண்டில், காடுகளின் மீதான உலகளாவிய முதலீடு 84 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.
- பருவநிலை மற்றும் பல்லுயிர் இலக்குகளை அடைய 2030 ஆம் ஆண்டில் வருடாந்திர முதலீடு 300 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்க வேண்டும்.
- 2050 ஆம் ஆண்டில், தேவையான வன முதலீடு ஆண்டுக்கு 498 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதன் விளைவாக தோராயமாக 216 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிலான வருடாந்திர முதலீட்டு இடைவெளி ஏற்படுகிறது.
- தனியார் வன நிதி ஆனது 2023 ஆம் ஆண்டில் 7.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது என்பதோடு இது மிகப் பிரதானமாக குறைந்த ஆபத்துள்ளச் சந்தைகளுக்கு வழங்கப் பட்டது.
- சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மானியங்கள் 2023 ஆம் ஆண்டில் மொத்தம் 406 பில்லியன் டாலராக இருந்தன.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தனியார் நிதி நிறுவனங்கள் அதிக காடழிப்பு அபாயத்தைக் கொண்ட நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட செயலில் உள்ள நிதியில் 8.9 டிரில்லியன் டாலர் நிதியைக் கொண்டிருந்தன.

# மாநிலச் செய்திகள்

## மத்தியப் பிரதேசத்தில் சிறு தானியக் கொள்முதல்




- மத்தியப் பிரதேச அமைச்சரவையானது முதன்முறையாக கோடோ மற்றும் குட்கி சிறு தானியங்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.
- இராணி துர்காவதி ஸ்ரீ-அன்ன புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் கீழ் ஜபல்பூர், கட்னி, மண்டலா மற்றும் பிற மாவட்டங்களில் கொள்முதல் மேற்கொள்ளப்படும்.
- ஸ்ரீ அன்ன கூட்டமைப்பு ஆனது குட்கிக்கு குவிண்டாலுக்கு 3,500 ரூபாய் மற்றும் கோடோவுக்கு குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் என்ற விலையில் 30,000 மெட்ரிக் டன் சிறு தானியங்களை வாங்கும்.
- விவசாயிகள் தங்கள் வங்கிக் கணக்குகளுக்கு நேரடிப் பண பரிமாற்றம் மூலம் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் என்ற கூடுதல் ஊக்கத்தொகையைப் பெறுவர்.

- சோயா அவரை விவசாயிகளுக்கான விலைப் பற்றாக்குறை ஈடு செலுத்தும் திட்டம் (பவந்தர் திட்டம்) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 24 முதல் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி வரை செயல்படுத்தப்படும்.
- குறைந்தபட்ச ஆதரவு விலை (குவிண்டாலுக்கு 5,238 ரூபாய்) மற்றும் மாதிரி/சந்தை விகிதத்திற்கு இடையிலான வேறுபாடு DBT மூலம் செலுத்தப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் 2025




- 5வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளானது (KIUG) ராஜஸ்தானில் நடைபெற உள்ளன.
- இந்த விளையாட்டுப் போட்டிகள் இராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர், அஜ்மீர், உதய்பூர், ஜோத்பூர், பிகானர், கோட்டா மற்றும் பரத்பூர் ஆகிய ஏழு நகரங்களில் நடைபெற உள்ளன.
- மொத்தம் 23 பதக்க விளையாட்டுகள் மற்றும் ஒரு செயல்விளக்க விளையாட்டுப் போட்டிகள், கோ-கோ ஆகியவை இதில் இடம் பெறும்.
- இந்த ஆண்டு சேர்க்கப்பட்ட புதிய துறைகளில் கடற்கரை கைப்பந்துப் போட்டி, படகோட்டம் மற்றும் துடுப்பு படகோட்டம்/கயாக்கிங் மற்றும் சைக்கிள் ஓட்டுதல் ஆகியவை அடங்கும்.
- பல்கலைக்கழக அளவிலான விளையாட்டு வீரர்களை உயர் மட்டப் போட்டிகளுடன் இணைக்கும் ஒரு தேசிய தளமாக KIUG செயல்படுகிறது.
- முந்தையப் போட்டியானது வடகிழக்கு இந்தியாவில் நடைபெற்றது என்பதோடு, இதில் சண்டிகர் பல்கலைக்கழகம் ஒட்டு மொத்த வெற்றியாளர் பட்டத்தை வென்றது.
- கேலோ இந்தியா என்பது இந்திய அரசின் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் ஒரு முதன்மைத் திட்டமாகும்.

# இதரச் செய்திகள்

## தஃப்தான் எரிமலை

- தஃப்தான் எரிமலையானது 710,000 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வெடிப்பதற்கான

அறிகுறிகளைக் காட்டுகிறது.

- தஃப்தான் எரிமலை தென்கிழக்கு ஈரானில் காஷ் நகருக்கு அருகில் அமைந்துள்ளது.
- இது யூரேசிய கண்டத் தட்டுக்கு அடியில் அரேபிய தட்டு கீழமுங்கியதால் உருவாக்கப் பட்ட 3,940 மீட்டர் உயர பாறையடுக்கு எரிமலை/ஸ்ட்ராடோவோல்கானோ ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் 2024 ஆம் ஆண்டு மே மாதம் ஆகிய காலக் கட்டத்திற்கு இடையில், அதன் உச்சிக்கு அருகில் 9 சென்டிமீட்டர் நில உயர்வு ஏற்பட்டதை செயற்கைக் கோள் தரவு கண்டறிந்தது.
- இந்த உயர்வு எரிமலைக்கு அடியில் நிலத்தடி வாயு அல்லது பாறைக் குழம்பின் அழுத்தம் அதிகரிப்பதைக் குறிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டில், எரிமலையிலிருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் வாயுக்களின் வெளியேற்றம் காணப்பட்டது.
- புதிய ஆதாரங்களின் அடிப்படையில் அறிவியலாளர்கள் தஃப்தான் எரிமலையை அழிந்து போன நிலையிலிருந்து செயலற்ற நிலைக்கு மறுவகைப் படுத்தியுள்ளனர்.
- இதற்கு முன்னர் அறியப்பட்ட வெடிப்புகள் எதுவும் இல்லை என்றாலும் கந்தகத்தை உமிழும் எரிமலை உமிழ்வுத் துளைகள் இன்னும் செயலில் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★